பண்டாரபுரம் ஊராட்சி மன்றத் தனிஅலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலரின் (கிராம ஊராட்சிகள்) அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: எஸ்.ஏ.பாலமுருகன்.,

அனுமதி எண்: ந.க.எண்.1/2025-26 நாள்: 23.08.2025

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம்- தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம வட்டம் - சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம் - பண்டாரபுரம் ஊராட்சி கிராமம் சர்வே எண்: 434/1A2B ச.மீ 3442 (0.85 ஏக்கர்) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனை பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1) நகர் ஊரமைப்பு தூத்துக்குடி மாவட்ட துணை இயக்குனர் அவர்களின் நடவடிக்கைகள் ROC NO.NPP9SP2G/THOOTHUKUDI/2024/TCP நாள்:20.08.2024

2) சாலை உள்ளாட்சிக்கான இடம் மற்றும் மின்வாரியத்திற்கான இடத்திற்கான ஒப்படைப்பு தானப்பத்திர எண் 1520/2024, நாள் 28.06.2024

3)மனுதாரர் திரு.ராஜகுமார் ராஜேஷ், விண்ணப்பம் நாள்: 28.07.2025

(மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் துணை இயக்குனர் தூத்துக்குடி அவர்களுக்கு முகவரியிட்டது)

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டம் சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம் புதுக்குளம் கிராமம் மற்றும் பண்டாரபுரம் கிராம ஊராட்சி சர்வே எண் : 434/1A2B ச.மீ 3442 (0.85 ஏக்கர்) ச.மீ பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனை பிரிவுக்கு பார்வை (1) ல் கண்டுள்ளபடி நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் மனை பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது..

இதன் அடிப்படையில் கீழ்காணும் பொது நிபந்தனைகளுடன் இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

1. மேற்காணும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள், மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும். இதில் எவ்வித விதிமீறலும் அனுமதிக்கப்படாது.
2. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள

வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதி உள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம்

3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தார் சாலைகள், தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் குழாய் அமைக்கப்பட்டுள்ளது.
4. மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட நுழைவாயில் 6*4 அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்க வேண்டும்.
6. பார்வை 1-ல் கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் இந்த மனை பிரிவுகளுக்கு பொருந்தும்.
7. மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள விபரங்களில் ஏதேனும் சரியானவை அல்ல என்று பின்வரும் காலங்களில் அறியப்பட்டாலோ அல்லது அரசு விதிமுறைகள் மீறப்பட்டாலோ இவ்வாணை உடனடியாக எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.
8. வரன்முறை செய்யப்படும் மனைகள் குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பின், நீதிமன்ற தீர்ப்பினை பொறுத்து இவ்வாணையிணை இரத்து செய்திட சாத்தான்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) -க்கு முழு அதிகாரம் உண்டு.

24/9/25

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர்
(கிராம ஊராட்சிகள்)
பண்டாரபுரம் ஊராட்சி

22/9/25

பெறுநர்:

திரு.ராஜகுமார் ராஜேஷ்,
தஞ்சைநகரம், பண்டாரபுரம்

நகல்:

1. சார்பதிவாளர் அவர்கள் சாத்தான்குளம் அலுவலகம்
2. நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் - தூத்துக்குடி
3. தூத்துக்குடி மாவட்ட அலுவலகம் தூத்துக்குடி - 2
4. வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)
5. பண்டாரபுரம் ஊராட்சி இருப்பு கோப்பு.